

வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வளவனூர் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் என்.கே.எஸ்.வியின் புதல்வர் என்.கே.எஸ்.வி.சுதர்சனசாமி அவர்களின் மறைவிற்கு நேரில் சென்று அஞ்சலி செலுத்தி பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். வளவனூர் பேரூர் செயலாளர் பா.ஜீவா, பொதுக்குழு உறுப்பினர் டி.என்.ஜெ.சம்பத், தலைமை கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ், ஒன்றியச் செயலாளர் வி.ஜி.பிரபாகரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு உள்ளிட்ட பலர் அஞ்சலி செலுத்தினர்.

### ஒன்றிய அரசு சமர்ப்பித்த பொருளாதார ஆய்வறிக்கையில்

# 44 முறை இடம் பெற்ற ‘தமிழ்நாட்டின்’ பெயர்!

### கழக அரசின் திட்டங்கள் – சாதனைகளை அடுக்கடுக்காகப் பட்டியலிட்ட ஆய்வறிக்கை!

புதுடெல்லி, பிப். 3 -

நேற்று முன்தினம் தாக்கலான பொருளாதார ஆய்வறிக்கையில், தமிழகத்தின் பெயர் 44 முறை இடம்பெற்றுள் ளது. தொழிற்சாலை, தனிநபர் சராசரி, சிறு,குறு, நடுத்தர தொழில்கள், விவசாயம், சேவை, திறன் வளர்ப்பு கல்வி, முதலீட்டாளர்களுக்கு ஆதரவு ஆகியவற்றில் தமிழ்நாடு எவ்வாறு முன்னிலை வகிக்கிறது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின்காலணி, பாரம்பரிய தோல் துறையில் தமிழகம் 38 சதவீத பங்கு 04 தமிழகத்துக்கு அங்கீகாரம் வகிக்கும் நிலையில், 2 லட்சத்துக்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் உருவாக்கப் பட்டுள்ளதாக கூறப்பட்டு உள்ளது. நாட்டின் தோல் பொருள் ஏற்றுமதியில், தமிழகம் 47 சதவீத பங்கு வகிக்கிறது எனவும், தைவானின் பெங் டே உட்பட அன்னிய முதலீடுகள், உலக காலணி தயாரிப்பு நிறுவனங்களை ஈர்க்க அரசு எடுத்துள்ள முயற்சிகள் போன்றவையும் பட்டியலிடப்பட்டு உள்ளன. வருங்காலத்தில் காலணி தொழில் முதலீடுக்கான மாவட்டங்களாக மதுரை, சிவகங்கை ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் வாயிலாக, உற்பத்தியாளர்க ளுக்கு தேவையான நிலம் கிடைப் பது உறுதி செய்யப்பட்டுள்ளது. கெய்டன்ஸ் எனப்படும் தமிழக அரசின் முதலீடு மேம்பாட்டு ஏஜென்சி, பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரு வதாகவும், மாண்டரின், ஜப்பான், கொரிய மொழிகளில் விளம்பரங் களை தயாரித்து வெளியிடுவதாகவும்; தற்போது ஜெர்மன், பிரெஞ்ச் மொழிகளிலும் விளம்பர தயாரிப்பு நடைபெறுவதாகவும் கூறப்பட்டு உள்ளது.

முதலீட்டாளர்களுக்கு பிரத்யேக அதிகாரி நியமிக்கப்பட்டு, தொழில் துவங்க வழிகாட்டப்படுவதால், உற்பத்தி ஆலை துவங்க ஆதரவான மாநிலமாக தமிழகம் இருப்பதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# நீலகிரியில் - அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

### கழகத்தினருக்கு – மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள்!



நீலகிரி, பிப். 3-

நீலகிரி மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவுநாள் அன்று கழகத்தினர் அனைவரும் தவறாது மரியாதை செலுத்திட மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் வேண்டுகோள் விடு த்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

அறிவுலக மேதை, திராவிட இயக்க ஆசான், தி.மு. கழக நிறுவனர், பேறறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவுநாள் பிப்ரவரி 3ம் தேதி அனுசரிக்கப்படுகிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிநின்று அண்ணாவின் கொள்கை கோட்பாடுகளை துளியும் பிசகின்றி காத்து அவர் உருவாக்கிய திராவிட முன்னேற்ற கழக பேரியக்கத்தை கோடிக்கணக்கான தொண்டர்களையும், அனுதாபிகளையும் கொண்டு தலைவர் கலைஞர் அவர்கள் வழிநடத்தி வந்தார்கள். முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வழிநின்று செயல்படும் கழக தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் அறிவுரைப்படி பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவுநாளை ஒவ்வொரு கழக தொண்டனும் அனுசரித்திட வேண்டும்.

அதன்படி நீலகிரியில் இன்று (03.02.2025 - திங்கட்கிழமை) காலை 10 மணியளவில் குன்னூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு குன்னூர் நகர கழக அலுவலகத்திலிருந்து மவுன ஊர்வலமாக சென்று கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்துவர், தொடர்ந்து காலை 11 மணியளவில் மாவட்ட கழக அலுவலகம் உதகை கலைஞர் அறிவாலய முகப்பிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு கழக நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்த உள்ளனர்.

மேலும், கொணவாக்கரை, பெங்காம் ஆகிய பகுதிகளிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்தும், மற்ற இடங்களில் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ படங்களுக்கு மாலை அணிவித்தும் மௌன அஞ்சலி செலுத்திட அனைத்து கழக தோழர்களையும் வேண்டுவதோடு, இதற்கான ஏற்பாடுகளை தொடர்புடைய நகரஒன்றியபேரூர்- கிளை கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சிறப்புடன் செய்திட அனைவரையும் வேண்டுகிறேன். அண்ணா வழியில் அயராது உழைப்போம்..!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் கூறிப்பிட்டுள்ளார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## கே.எஸ். முருகேசன்

பிப்ரவரி 3 (2004)



மாணவப் பருவத்திலிருந்தே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகப் பணியாற்றியவர்.

கூத்தைப்பார் ஊராட்சி மன்றத் தலைவராகவும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவராகவும், திருவெறும்பூர் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

1977ல் திருவெறும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


## காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள்!

காஞ்சிபுரம், பிப். 3 -

காஞ்சிபுரம் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்ச் செல்வன் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன் னிட்டு இன்று (3.2.2025 திங்கள் கிழமை) காலை சரியாக 6.30 மணிக்கு காஞ்சிபுரம் காந்தி ரோட்டில் உள்ள தந்தை பெரியார் அவர்களின் நினைவு தூணிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது .

எனவே நிகழ்ச்சியில் மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள், வார்டு, கிளைச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடி கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச் செல்வன் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பேரறிஞர் அண்ணா 56-வது நினைவு நாள்!

### முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# இன்று (பிப்-3) அமைதிப் பேரணி!

### மாவட்டக் கழகத் தோழர்களுக்கு – சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



காஞ்சி தந்த காவியத் தலைவர் - உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் - தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் - "இப்படை தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் - "மெட்ராஸ் ஸ்டேட்" என்ற பெயரை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் - சுயமரியாதைச் சுடரொளி - சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் - எழுத்து வேந்தர் - தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் - **பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினையொட்டி, முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் இன்று (பிப்ரவரி - 3, திங்கட்கிழமை) காலை 7.00 மணிக்கு காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் - முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் - முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

**நாள் : 31.01.2025** **சென்னை மாவட்ட தி.மு.க.**

### அரசு அலுவலகங்களுக்கு வரும்

# பொதுமக்களிடம் கனிவுடன் நடந்து குறைகளை தீர்த்திடுக!

### புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, பிப்.3-**

**“அரசு அலுவலகங்களுக்கு வரும் பொது மக்களிடம் கனிவுடன் நடந்து அவர்களின் குறைகளை தீர்த்திட நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தன்னை சந்தித்த புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் வலியுறுத்தினார்.**

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.2.2025) தலைமைச் செயலகத்தில், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களான ஆர்.சதீஷ் (தருமபுரி), எஸ்.சரவணன் (திண்டுக்கல்), எம்.பிரதாப் (திருவள்ளூர்), சி.தினேஷ் குமார் (கிருஷ்ணகிரி), எஸ்.சேக் அப்துல் ரகுமான் (விழுப்புரம்), கே.தர்பகராஜ் (திருவண்ணாமலை), வி.மோகனசந்திரன் (திருப்பத்தூர்), டாக்டர் ஆர்.சுகுமார் (திருநெல்வேலி), திருமதி கே.சிவசவுந்தரவள்ளி (திருவாரூர்) ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்தச் சந்திப்பின்போது, முதலமைச்சர் அவர்கள் புதிய மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் உரை யாற்றியபோது,

இன்று முதல் மக்களுடன் நேரடி தொடர்பில் களத்தில் இருக்கப் போகும் நீங்கள், அரசின் முத்திரை திட்டங்கள், அன்றாடம் செயல்படுத்தும் திட்டங்கள், மக்கள் நலத்திட்டங்கள், இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, அடிப்படை தேவைகளை நிறை வேற்ற வேண்டிய திட்டங்களில் அதிகம் கவனம் செலுத்த வேண்டும் என்றும், அரசு அலுவலகங்களுக்கு சென்று திடீர் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மேலும், மக்கள் குறை தீர்ப்பு முகாம் மனுக்கள் மீதும், முதல்வரின் முகவரி மனுக்கள் மீதும் சிறப்பு கவனம் செலுத்தி, தீர்வு காணப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

**மக்களின் குறைகளை தீர்த்திடுவீர்!**

அரசு அலுவலகங்களுக்கு வரும் மக்களிடம் கனிவுடன் நடந்து கொண்டு, அவர்களின் குறைகளை அங்கேயே தீர்த்து வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட வேண்டும் என்றும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் மாவட்டங்களில் உள்ள பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசித்து தீர்வு காண வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

**மக்கள் பாராட்டும்படி நடந்து கொள்வீர்!**

ஒவ்வொரு மாவட்டமாக தொடர்ந்து சுற்றுப் பயணம் மேற்கொண்டு வரும்போது, அங்கு மக்களை சந்திக்கின்றபோது, அவர்கள் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் என்று பாராட்டும்படியாக பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மக்களின் பாராட்டைப் பெற்ற முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் போன்ற திட்டங்களின் செயல்பாடுகளை நேரடியாக களத்திற்கு சென்று ஆய்வு செய்ய வேண்டும் என்றும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம் போன்ற திட்டங்களை கவனமாக கண்காணித்து திட்டங்கள் தகுதியுள்ள ஒவ்வொருவருக்கும் சென்று சேர்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவராக பணியாற்ற இருக்கும் அனைவருக்கும் தனது பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொதுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரீஷ் தக்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஒன்றியம் கல்லூரணிக்காடு ஊராட்சி அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் முதலமைச்சர் அவர்களின் ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் 29.01.2025 அன்று துவக்கி வைத்து கோரிக்கை மனுக்களை பொது மக்களிடம் பெற்றுகொண்டு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் , சட்டமன்ற உறுப்பினர்கள் கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் அவர்கள் (பேராவூரணி), மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் மற்றும் பலர் உடன் உள்ளனர்.